புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# யுகபாரதியின் திரையிசைப் பாடல்களில் தொடை நயம்

கு.ராஜ் குமார்
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி
இராசிபுரம் – 637401

முனைவர் து.ரேணுகாதேவி
நெறியாளர், தமிழாய்வுத்துறை
உதவிப்பேராசிரியர்
திருவள்ளுவர் அரசு கலைக்கல்லூரி
இராசிபுரம் – 637401

ஆய்வுச் சுருக்கம்

தமிழ்மொழி இலக்கிய வளமும், இலக்கண நுட்பமும் நிறைந்த மொழியாகச் சிறந்து விளங்குகிறது. கதை, சிறுகதை, புதினம், கவிதை, நாடகம், செய்யுள், உரைநடை மற்றும் பாட்டு எனப் பல்வேறு வகைகளில் இலக்கியங்கள் பல்வேறு வடிவங்கள் பெற்று தமிழில் வழங்கப்படுகின்றது. தமிழ் இலக்கிய வடிவங்களில் ஒன்றான செய்யுளின் பரிணாம வளர்ச்சியே திரையிசைப்பாடல்கள் ஆகும். இத்திரையிசைப்பாடல்களை எழுதும் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் யுகபாரதி. தமிழ் இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகையாகப் பகுக்கப்பட்டுள்ளது. அமிதசாகரர் இயற்றிய யாப்பருங்கலக்காரிகையில் செய்யுளின் உறுப்புகளான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை இடம் பெற்றுள்ளன. யாப்பருங்கலக்காரிகை தரும் தொடை நயத்தையும், அத்தொடை இலக்கணத்தின் அடிப்படையில் அமைந்த யுகபாரதியின் திரையிசைப் பாடல்களையும் ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## முன்னுரை

திரையிசைப் பாடல்கள் இயற்றுவதற்கு இலக்கிய இலக்கண மொழி அறிவு மிகவும் அவசியமானது. யாப்பிலக்கணத்தின் தொடை நயத்தைத் தவிர்த்துவிட்டு பாடல்கள் இயற்றுவது கடினம். திரையிசைப் பாடலுக்கு தொடை நயம் இன்றியமையாததாக விளங்குகிறது. இத்தொடை நயத்தை யுகபாரதி தன் திரையிசைப் பாடல்களில் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதை எடுத்தியம்புவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு நெறிமுறைகள்

யுகபாரதியின் திரையிசைப் பாடல்களை இலக்கணத்தோடு ஒப்பிட்டுக் கூறுவதால் ஒப்பீட்டுத் திறனாய்வு முறையும் திரையிசைப் பாடல்களுக்கான விளக்கங்களை கொடுப்பதால் விளக்கமுறைத் திறனாய்வு முறையும் மற்றும் பாடல்களைத் தொகுத்தும் பகுத்தும் கூறுவதால் பகுப்பாய்வுமுறைத் திறனாய்வு முறையும் இவ்வாய்வில் பயன்படுத்தப்படுள்ளது.

## தொடை

செய்யுளில் அடிதோறும் எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது தொடை எனப்படும். ஒரு செய்யுளில் அமைந்த அடிகளும் அவ்வடிகளில் இடம் பெற்றுள்ள சீர்களும் ஒன்றோடு ஒன்று பொருந்திவரத் தொடுப்பது தொடை எனப்படுகிறது. இதனை யாப்பருங்கலக்காரிகை,

அடியிரண்டு தொடுத்தல் முதலாயின தொடையே என்று குறிப்பிடுகின்றது.

தொடை வகைகள்

செய்யுளில் அடிகள் தோறும் முதலெழுத்து ஒன்றி வருவது மோனை. இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு. இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை. மாறுபட்ட பொருளைத் தருவது முரண். ஒவ்வொரு அடியின் முதலெழுத்து அளபெடுத்து வருவது அளபெடை எனத் தொடை ஐந்து வகைப்படும். தொடையின் வகைகளை,

"எழுவா யெழுத்தொன்றின் மோனை யிறுதி யியைபிரண்டாம்
வழுவா வெழுத்தொன்றின் மாதே யெதுகை மறுதலைத்த
மொழியான் வரினு முரணடிதோறு மொழிமுதற்கண்
அழியா தளபெடுத் தொன்றுவ தாகு மளபெடையே"[1]

என்று யாப்பருங்கலக்காரிகை வகைப்படுத்துகின்றது.

மோனைத் தொடை, இயைபுத் தொடை, எதுகைத் தொடை, முரண் தொடை, அளபெடைத் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை என்று தொடை வகைகளையும் யாப்பருங்கலக்காரிகை எடுத்தியம்புகிறது. செந்தொடை குறித்து,

"அந்த முதலாத் தொடுப்பதந் தாதி யடிமுழுதும்
வந்த மொழியே வருவ திரட்டை வரண்முறையான்
முந்திய மோனை முதலா முழுதுமொவ் வாதுவிட்டாற்
செந்தொடை நாமம் பெறுநறு மென்குழற் றேமொழியே"[2]

என்று யாப்பருங்கலக்காரிகை குறிப்பிடுகின்றது.

ஓரடியின் இறுதி எழுத்தோ, சீரோ, அசையோ அடுத்த அடியின் முதல் எழுத்தோ, சீரோ, அசையோ ஒன்றி வருவது அந்தாதித் தொடை. ஓரடியின் முதலில் வந்த சொல் அடுத்தடுத்து தொடர்ந்து வருவது இரட்டைத் தொடை. மோனைத் தொடை முதல் இரட்டைத் தொடை வரை இடம் பெறாதவற்றைக் கூறுவது செந்தொடை என யாப்பருங்கலக்காரிகை எடுத்துரைக்கிறது.

தொடையும் யுகபாரதியின் திரையிசைப் பாடல்களும்

திரையிசைப் பாடல் இயற்றுவதற்கு யாப்பின் உறுப்புகளுள் ஒன்றானத் தொடை இன்றியமையாதது. அத்தொடை நயம் யுகபாரதியின் பல்வேறு பாடல்களில் பயின்று வருகிறது. தொடை நயத்தின் இலக்கணக் கூறுகள் யுகபாரதியின் பாடல்களில் பரவலாகக் காணப்படுகிறது.

மோனைத் தொடை

செய்யுளில் அடிதோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை ஆகும். யுகபாரதி,

"அன்புள்ள ஒளியே
அன்புள்ள தமிழே
அன்புள்ள செய்யுளே
அன்புள்ள இலக்கணமே"[3]

என்று குறிப்பிடுகிறார்.

இப்பாடலில் ஒவ்வொரு அடியின் முதலெழுத்தாக 'அ' என்னும் எழுத்து அமைந்துள்ளதால் மோனைத் தொடைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது என்பதை யுகபாரதியின் இவ்வடிகளின் வழியாக உணர முடிகிறது. மேலும்,

"ஒவ்வொரு நொடியும்
ஒரு சித்திரமாகும்
ஒவ்வொரு கொடியும் சரிகம பதநி பாடும்"[4]

என்று யுகபாரதி குறிப்பிடுகிறார்.

இப்பாடலில் ஒவ்வொரு அடியின் முதலெழுத்தாக 'ஒ' என்னும் எழுத்து பயின்று வந்துள்ளமையால் மோனைத் தொடைக்குச் சான்றாக அமைகின்றது.

இயைபுத் தொடை

செய்யுளின் அடிதோறும் இறுதி எழுத்து அல்லது இறுதிச்சீர் ஒன்றிவரத் தொடுப்பது இயைபுத் தொடை எனப்படும். இயைபுத் தொடை நயத்தை,

“காற்று புதிதாய் வீசக் கண்டேன்
காதில் கவிதைப் பேசக் கண்டேன்
ஸ்நேகம் இனிதாய் சேரக் கண்டேன்
நான் கண்டேன்
காலம் செய்யும் மாயம் கண்டேன்
காலங்கள் நான்காய் மாறக் கண்டேன்
உள்ளங் கையில் உலகம் கண்டேன்
நான் கண்டேன்”[5]

என்ற பாடலில் குறிப்பிடுகிறார்.

இப்பாடலில் ‘கண்டேன்’ என்னும் சொல் ஒவ்வொரு அடியின் இறுதியிலும் இடம் பெற்று இயைபுத் தொடைக்குச் சான்றாகிறது.

“சிவன்மகனே அரோகரா
சரவணனே அரோகரா
நகைமுகனே அரோகரா
நவயுகனே அரோகரா”[6]

இப்பாடலில் ‘அரோகரா’ என்னும் சொல் ஒவ்வொரு அடியின் இறுதியிலும் வந்து இயைபுத் தொடையை யுகபாரதியின் திரையிசைப் பாடல்களில் சிறப்பாகக் கையாண்டுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

எதுகைத் தொடை

செய்யுளில் அடிதோறும் முதற்சீரின் இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடை ஆகும். எதுகைத் தொடை நயத்தை,

“அடியே உன்னாலே
முடியாதே – உள்ளம்
படியாதே – வெள்ளம்
வடியாதே – வில்லும்
ஒடியாதே”[7]

என்று தம் பாடலில் யுகபாரதி கையாண்டுள்ளார்.

இப்பாடலில் இரண்டாம் எழுத்தான ‘டி’ என்னும் எழுத்து ஒன்றி வரத் தொகுக்கப்பட்டு இருப்பதால் அடி எதுகைத் தொடை பயின்று வந்துள்ளதைக் காண முடிகிறது.

முரண் தொடை

முரண் என்றால் மாறுபாடு என்று பொருள். செய்யுளின் சொல்லோ, பொருளோ அடிதோறும் முரண்பட தொடுப்பது முரண் தொடை ஆகும். இதனை யுகபாரதி

“ஈசலா இருந்த என்ன
வௌவாலா மாத்திப்புட்ட
வாசலா கெடந்த என்ன
கோலமா போட்டுபுட்ட”[8]

என்று பாடுகிறார்.

இப்பாடலின் அடிதோறும் ஈசலா – வௌவாலா, வாசலா – கோலமா, என்ற சொற்கள் முரண்பட்டு வந்துள்ளமையால் சொல் முரண்யின்று வந்துள்ளதை இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

“தூசியா பறந்த என்ன
பாசியா படிய விட்ட
கோரையா வளந்த என்ன
குடிசையா மெழுகிப்புட்ட”[9]

இப்பாடலில் தூசியா - பாசியா என்ற சொல்லும், கோரையா – குடிசையா என்ற சொல்லும் முரண்பட்டு நிற்பதால் சொல் முரண் தொடை இடம் பெற்றுள்ளது.

“குறிலாய் இருந்தேன்
நெடிலாய் எனையும்

மாற்றம் செய்தாயே"[10]

இப்பாடலில் குறிலாய் – நெடிலாய் என்ற சொல் முரண்பட்டு நிற்பதால் சொல் முரண் என்னும் முரண் தொடையை யுகபாரதி தன் திரையிசைப் பாடல்களில் இடம் பெற்றுள்ளதை அறிய முடிகிறது.

அளபெடைத் தொடை

செய்யுளில் அடிதோறும் முதற்கண் அமைந்த சீர் அளபெடுத்து வருவது அளபெடைத் தொடை ஆகும். இதனை,

"ஓ ஓசரம்பாத்து வானம் கூட"[11]

என்று யுகபாரதி தம் பாடலில் குறிப்பிடுகிறார்.

இப்பாடலின் அடியின் ஓ ஓ என்ற சொல் நீண்டு ஒலிப்பதால் அளபெடைத் தொடைக்குச் சான்றாகிறது.

இதனை திருவள்ளுவரின்,

"ஓஒ இனிதே எமக்குஇந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது"[12]

என அளபெடைத் தொடைக்குச் சான்றாக அமைவதை இக்குறளின் மூலம் அறிய முடிகிறது.

அந்தாதித் தொடை

செய்யுளில் அடிதோறும் இறுதியில் நின்ற ஓரெழுத்தோ, ஓரசையோ அல்லது சீரோ அடுத்த அடிக்கு முதலாக நின்று தொடுப்பது அந்தாதித் தொடையே ஆகும்.

"நெஞ்சத்திலே நெஞ்சத்திலே
நீதானே மொத்தத்திலே

மொத்தத்திலே உன்னழகைக்
கண்டேனே முத்தத்திலே

முத்தத்திலே ஆசையில்லை.
சத்தமெல்லாம் வெட்கத்திலே

வெட்கத்திலே தத்தளித்தால்
காதல் பொங்கும் நெஞ்சத்திலே"[13]

இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு அடியின் இறுதிச் சீர்களான நெஞ்சத்திலே, மொத்தத்திலே, முத்தத்திலே, வெட்கத்திலே ஆகிய சீர்களும் ஒன்றி வந்துள்ளமையால் அந்தாதித் தொடைக்குச் சான்றாகத் திகழ்கிறது.

இரட்டைத் தொடை

செய்யுளில் ஓரடி முழுவதும், முதலில் வந்த சொல்லே அடுத்த எல்லா இடங்களிலும் வரத் தொடுப்பது இரட்டைத் தொடை.

"என்ன? என்ன? என்ன? என்ன?
உந்தன் கண்கள் கேட்பதென்ன?
என்ன? என்ன? என்ன? என்ன?
என்னில் வெட்கம் பூப்பதென்ன?"[14]

இப்பாடலில் முதல் அடி முழுவதும் 'என்ன' என்ற சொல் அடுத்தடுத்து எல்லா இடங்களிலும் வந்துள்ளமையால் இரட்டைத் தொடைக்குச் சான்று ஆயிற்று.

"ஓடு ஓடு ஓடு ஓடு
ஓடு ஓடு – நீ நெனச்ச எடம்
சேரும் வர நிக்காம ஓடு"[15]

இப்பாடலில் முதல் அடி, இரண்டாம் அடி மற்றும் மூன்றாம் அடியின் இறுதியிலும் 'ஓடு' என்ற சொல்லே இடம் பெற்றுள்ளதால் இரட்டைத் தொடை ஆயிற்று என்பதை யுகபாரதியின் திரையிசைப் பாடல்கள் மூலம் அறிய முடிகிறது.

செந்தொடை

மோனைத் தொடை முதல் இரட்டைத் தொடை வரை உள்ளத் தொடைகளில் கூறப்படாதவற்றை எடுத்துக் கூறும் தொடை செந்தொடை.

"தாய்மடி தருகிற அரவணைப்பு
உறங்கும் குழந்தையின்
குறுஞ்சிரிப்பு"[16]

இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடிகளில் தாய் குழந்தையை உறங்க வைத்து, உறங்கும் குழந்தையின் சிரிப்பைப் பார்த்து மகிழும் தாய்மையின் சிறப்பை விளக்கி இப்பாடலில் தந்துள்ளார் யுகபாரதி.

முடிவுரை

யுகபாரதி தம் திரையிசைப் பாடல்களில் யாப்பிலக்கணத்தில் கூறப்படும் செய்யுளின் உறுப்புகளில் ஒன்றானது தொடை, அத்தொடையின் வகைகளான மோனைத் தொடை, இயைபுத் தொடை, எதுகைத் தொடை, முரண் தொடை, அளபெடைத் தொடை, அந்தாதித் தொடை, இரட்டைத் தொடை, செந்தொடை எனத் தொடை வகைகளை மிகவும் நேர்த்தியாகவும், சிறப்பாகவும் தம் திரையிசைப் பாடல்களில் கையாண்டுள்ளதை இவ்வாய்வின் வழி புலனாகிறது.

அடிக்குறிப்புகள்

1. யாப்பருங்கலக்காரிகை நூற்பா எண் – 16, பக்க எண் – 57.
2. யாப்பருங்கலக்காரிகை நூற்பா எண் – 17, பக்க எண் – 60.
3. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, பாடல் எண் – 096, பக்க எண் – 226.
4. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 2, பாடல் எண் – 338, பக்க எண் – 204.
5. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, பாடல் எண் – 110, பக்க எண் – 251.
6. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, பாடல் எண் – 192, பக்க எண் – 431.
7. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, பாடல் எண் – 121, பக்க எண் – 275.
8. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, பாடல் எண் – 182, பக்க எண் – 409.
9. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, பாடல் எண் – 182, பக்க எண் – 409.
10. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 2, பாடல் எண் – 358, பக்க எண் – 248.
11. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 2, பாடல் எண் – 377, பக்க எண் – 289.
12. திருக்குறள் குறள் எண் – 1176, பக்க எண் – 243.
13. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, பாடல் எண் – 051, பக்க எண் – 132.
14. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, பாடல் எண் – 107, பக்க எண் – 245.
15. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 2, பாடல் எண் – 337, பக்க எண் – 201.
16. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, பாடல் எண் – 038, பக்க எண் – 105.

துணைநூற்பட்டியல்

1. முனைவர் திருஞானசம்பந்தம் ச., யாப்பருங்கலக்காரிகை மூலமும் உரையும், கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு – 613 204, முதற்பதிப்பு ஜூன் 2011.

2. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 1, நேர்நிரை பதிப்பகம், 27 A, S 1, கிருஷ்ணாநகர் அனெக்ஸ், மதுரவாயில், சென்னை – 600 095, முதல் பதிப்பு செப்டம்பர் 2017.

3. யுகபாரதி பாட்டு புஸ்தகம் தொகுதி – 2, நேர்நிரை பதிப்பகம், 181, இரண்டாம் தளம், சி.வி.ராமன் தெரு, ராமகிருஷ்ணா நகர், ஆழ்வார்திருநகர், சென்னை – 600 087, முதல் பதிப்பு ஏப்ரல் 2019.

4. புலியூர்க் கேசிகன், திருக்குறள் புதிய உரை, தென்றல் நிலையம், 12 பி, மேலசன்னதி,

*சிதம்பரம் - 608001, முதல் பதிப்பு செப்டம்பர் 2009.*

*கலைச்சொற்கள்*

1. சரிகம பதநி - சுவரங்கள்
2. அரோகரா - கடவுள் முருகனை நினைத்து வழிபடும் சொல்
3. ஈசலா - கறையானின் ஒரு வகை ஈசல்
4. வௌவாலா - பாலூட்டி இனத்தைச் சேர்ந்த பறக்கும் விலங்கு
5. வாசலா - ஒரு வீட்டின் அல்லது கட்டிடத்தின் நுழைவுப் பகுதி
6. கோலமா - வீட்டின் வாசலில் மாவினால் இடுவது
7. தூசியா - காற்றில் கலந்திருக்கும் மிகச் சிறிய துகள்
8. பாசியா - கடல் மற்றும் நீர்நிலைகளில் வளரும் ஒருவகைத் தாவரம்
9. கோரையா - ஒரு வகைப் புல்
10. குடிசையா - வீடுகளின் வகைகளில் ஒன்று
11. மெழுகிப்புட்ட - குடிசை வீடுகளின் தரையில் சாணம் வைத்து வழிப்பது மெழுகுதல்
12. ஒசரம் - உயரம்
13. நெனச்ச - நினைத்த
14. எடம் - இடம்

********* ********* ********** ********* ********* ********** ********** **********